# விடியல் பயணம் ; தமிழ்நாட்டை கர்நாடகம் - ஆந்திரா பின்பற்றுகிறது!

## முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

93 கோடி ரூபாய்க்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு, இப்போது நடைபெற்று வருகிறது.

இப்போது, தருமபுரி சிப்காட் தொழில் பூங்காவில் இணையதளம் மூலமாக 200 ஏக்கர் நிலத்தில் தொழில் முனைவோர்களுக்காக நிலம் ஒதுக்கீடு செய்கின்ற பணிகள் நடைபெற்று வருகிறது. இதில், 7 தொழில் நிறுவனங்களுக்கு இடம் ஒதுக்கீடு இறுதி செய்யப்பட்டு, இன்று உங்களுடைய முன்னிலையில் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு திட்டங்கள் தருமபுரி மாவட்டத்திற்கு செய்து தரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இந்த நான்காண்டு காலத்தில், இந்த மாவட்டத்திற்கு மட்டும் 447 கோடியே 26 இலட்சம் ரூபாயில், 43 இலட்சத்து 86 ஆயிரத்து 926 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியிருக்கிறோம்!

**பயனடைந்தவர்களின் பட்டியல் இதோ!**

அதுமட்டுமல்ல, நம்முடைய ஆட்சியின் முத்திரைத் திட்டம் இருக்கிறது - அதில், தருமபுரி மாவட்டத்தில் பயனடைந்தவர்களின் பட்டியல் சொல்கிறேன். சிறிது பெரியதுதான்.

- கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 2 இலட்சத்து 84 ஆயிரத்து 91 பேருக்கு ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம்!
- 22 ஆயிரத்து 87 புதுமைப் பெண்களுக்கும் - 11 ஆயிரத்து 576 தமிழ்ப் புதல்வன்களுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம்!
- 76 ஆயிரத்து 958 இளைஞர்களுக்கு நான் முதல்வன் என்ற திட்டத்தில் பயிற்சி கொடுத்து, அவர்களுடைய திறனை மேம்படுத்தியிருக்கிறோம்!
- 48 ஆயிரத்து 504 குழந்தைகள், காலை உணவுத் திட்டத்தில் சூடாக, சுவையாக, சத்தான உணவை சாப்பிடுகிறார்கள்!
- 4 இலட்சத்து 22 ஆயிரத்து 535 பேரை, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் கவனித்துக் கொண்டோம்!
- கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தில், 93 ஆயிரத்து 379 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.
- இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டத்தில், 7 ஆயிரத்து 838 பேரின் உயிரையும், அவர்கள் குடும்பங்களின் மகிழ்ச்சியையும் காப்பாற்றியிருக்கிறோம்!
- ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம் 4 ஆயிரத்து 410 பேரை திடமானவர்களாக மாற்றியிருக்கிறது.
- கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மூலமாக 59 ஆயிரத்து 374 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.
- வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கும் திட்டம் மூலம் 6 ஆயிரத்து 523 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.
- புதிய வேளாண் காடு வளர்ப்பு திட்டம் மூலம் 2 ஆயிரத்து 125 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.
- 14 ஆயிரத்து 514 பேர் புதிய மின் இணைப்புகளை பெற்றிருக்கிறார்கள்.
- 2 இலட்சத்து 60 ஆயிரத்து 444 தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நலத் திட்ட நிதியுதவிகளை வழங்கியிருக்கிறோம்!
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டம் மூலம் 78 ஆயிரத்து 70 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.
- தாட்கோ மூலமாக 896 பேருக்கு கடனுதவி வழங்கியிருக்கிறோம்.
- தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக, 6 ஆயிரத்து 276 பேர் வேலை வாய்ப்புகள் பெற்றிருக்கிறார்கள்.

இப்படி இத்தனை இலட்சம் மக்களுக்கு இத்தனைத் திட்டங்களை தருமபுரிக்காக செய்திருக்கிறோம்; தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். இனியும் நாங்கள் தான் செய்யப் போகிறோம். இவ்வளவு திட்டங்களை சொல்லிவிட்டு, இப்படிப்பட்ட இவ்வளவு பெரிய விழாவில் புதிய அறிவிப்புகளை வெளியிடாமல் இருக்க முடியுமா? அதனால், சில அறிவிப்புக்களை நான் வெளியிட விரும்புகிறேன்.

**தருமபுரி மாவட்டத்திற்கு புதிய அறிவிப்புகள்!**

முதல் அறிவிப்பு - சித்தேரி ஊராட்சியில் இருக்கக்கூடிய 63 மலைக்கிராமங்களில் வசிக்கின்ற பழங்குடியின மக்களும், கொளகம்பட்டி, சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் வாழுகின்ற பொதுமக்களும், பல்வேறு பணிகளுக்கு பாப்பிரெட்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்வதற்கான தூரம் அதிகமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதனால், இந்த கிராமங்கள் எல்லாம் அருகாமையில் இருக்கின்ற அரூர் வருவாய் வட்டத்தில் இணைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு - ஒகேனக்கல் - தருமபுரியை இணைக்கக் கூடிய மாவட்ட நெடுஞ்சாலையில், தருமபுரியில் இருக்கின்ற ஆட்டுக்காரம்பட்டி முதல் பென்னாகரம் வரை உள்ள 25 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப்பகுதி, தற்போதுள்ள இருவழித்தடத்தில் இருந்து நான்கு வழித்தடமாக, 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கட்டமாக மேம்படுத்தப்படும்.

மூன்றாவது அறிவிப்பு - நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் பரிகம் ஊராட்சியில், பரிகம் முதல் மலையூர் வரை உள்ள வனச் சாலை

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தார்ச் சாலையாக மேம்படுத்தப்படும். நல்லம்பள்ளியில் இருக்கின்ற அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில், ஏழரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டடங்கள் கட்டப்படும்.

நான்காவது அறிவிப்பு - அதிக அளவில், புளி உற்பத்தி செய்கின்ற தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில், 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த புளி வணிக மையம் அமைக்கப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு - அரூர் நகராட்சியில் வாழ்கின்ற மக்களின் நலன் கருதி, வள்ளிமதுரை குடிநீர் வழங்கல் திட்டம் புதிய குழாய்களை பதித்தும், 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தும், 15 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**கலைஞர் காட்டிய வழியில் உழைத்துக் கொண்டிருக்கிறோம்!**

இப்படி, மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியின், ஒவ்வொரு தனிமனிதருடைய எதிர்பார்ப்பையும் நிறைவேற்றித் தருகின்ற ஆட்சியாக நம்முடைய திராவிட மாடல் ஆட்சி செயல்பட்டு வருகிறது.

சொன்னதை செய்வோம் - செய்வதைத்தான் சொல்வோம் என்று தலைவர் கலைஞர் காட்டிய வழியில் உழைத்துக் கொண்டிருக்கிறோம்!

2021 தேர்தலுக்கு முன்பு, விடியல் பயணம் திட்டம் குறித்த வாக்குறுதியை தேர்தல் அறிக்கையில் சொன்னோம். உடனே நமக்கு எதிரானவர்கள் என்ன சொன்னார்கள்? இது நிறைவேற்ற முடியாத வாக்குறுதி - இதனால், பேருந்துகளை குறைத்துவிடுவார்கள் - பேருந்துக் கட்டணத்தை உயர்த்திவிடுவார்கள் என்று தங்கள் இஷ்டத்துக்கு கதை - திரைக்கதை வசனமாக எழுத தொடங்கினார்கள்! ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாட்டின் நிதிநிலைமையை பாழ்படுத்துவதையும் மீறி, சொன்னதுபோல், ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றைக்கே, விடியல் பயணம் திட்டத்துக்கு கையெழுத்திட்ட கை தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய கை.

இந்தத் திட்டத்திற்கு ஆகின்ற பணத்தை, செலவாக பார்க்காமல், பெண்களுக்கான சேமிப்பாக, மகளிர் முன்னேற்றத்திற்கான முதலீடாகதான் நாங்கள் நினைத்தோம்! இதனுடைய பலன் சமூகத்தில் எதிரொலிக்க தொடங்கிவிட்டது!

**விடியல் பயணம் - மிகப்பெரிய புரட்சி!**

ஒவ்வொரு மாதமும் சுமார் ஆயிரம் ரூபாய் என்று நாம் ஆட்சிக்கு வந்த இந்த 51 மாதத்தில், ஒவ்வொரு மகளிரும் 50 ஆயிரம் ரூபாய் சேமித்திருக்கிறார்கள்! எவ்வளவு பெரிய புரட்சி இது! யாராலும் மாற்ற முடியாத, மறுக்க முடியாத சாதனை இது! அதனால்தான், இப்போது செய்திகளில் பார்த்திருப்பீர்கள்... இந்த விடியல் பயணம் திட்டத்தை, கர்நாடகா மாநிலத்திலும், ஆந்திரா மாநிலத்திலும் தற்போது நடைமுறைபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

அதனால்தான் சொல்கிறோம்... நாட்டின் அத்தனை வளர்ச்சித் திட்டங்களுக்கும் தமிழ்நாடுதான் முன்னோடி! திராவிட மாடல்தான் இந்தியாவிற்கான திசைகாட்டி!

இதைபொறுத்துக்கொள்ள முடியாமல்தான், ஆட்சிக்கு எதிராக சில விஷமிகள் அவதூறுகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் சொல்வதை பற்றி நான் கவலைப்படவில்லை. அதுதான் அவர்கள் அரசியல்! அவர்களைவிடவும் மலிவான அரசியல் செய்கின்றார் ஒருவர்! யாரென்று தெரியும் உங்களுக்கு - அவர்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு நியமித்திருக்கின்ற நம்முடைய ஆளுநர் ரவி அவர்கள்! ஆளுநர் மாளிகையில் இருக்கின்ற அவர் செய்கின்ற வேலை என்ன தெரியுமா? தி.மு.க. ஆட்சி மேல் அவதூறு பரப்புகின்றார்! தி.மு.க. மேல் அவதூறு பரப்புவார்! திராவிடத்தைப் பழிப்பார்! சட்டங்களுக்கு ஒப்புதல் தரமாட்டார்! இல்லாத திருக்குறளை அச்சிட்டு வழங்குவார்! தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதிப்பார்! நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களை இழிவுபடுத்துவார்! தமிழ்நாட்டின் கல்வி, சட்டம்-ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு பற்றியெல்லாம், உண்மைக்குப் புறம்பாக இல்லாதது பொல்லாததைச் சொல்லி, பீதியை கிளப்புவார்! இதை மட்டும் தான் அவர் செய்கிறார்.

**ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே சாட்சி!**

இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இதை நாங்கள் உங்களிடம் சொல்கிறோமோ, இல்லை நீங்கள் எங்களிடம் சொல்கிறீர்களா! இல்லை. ஒன்றிய பாஜக அரசு வெளியிடுகின்ற புள்ளி விவரங்களே சாட்சியிருக்கிறது!

அதுமட்டுமல்ல, இந்தியாவில் பாஜக ஆளும் மாநிலங்களை விட தமிழ்நாடு அனைத்து விதத்திலும் மிகச் சிறந்த மாநிலமாக இருக்கிறது. இதையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாமல், எரிச்சலில், தன்னுடைய கோபத்தை புலம்பலாக பொதுமேடைகளில் கொட்டித் தீர்க்கிறார்.

பள்ளிக் கல்வியில், இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறோம். தமிழ்நாடு அமைதியான மாநிலமாக இருப்பதால்தான் இந்த 4 ஆண்டு காலத்தில், 10 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை நாம் ஈர்த்திருக்கின்றோம்.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையாம். ஆளுநர் கண்டுபிடித்திருக்கிறார். தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின்

2022-ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இந்தியாவிலேயே பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடக்கின்ற மாநிலங்களில் பா.ஜ.க. ஆளுகின்ற உத்தர பிரதேசம்தான் முதலிடத்தில் இருக்கிறது. அதனால் ஆளுநர் அவர்களே, நீங்கள் கம்பு சுற்ற வேண்டியது இங்கே இல்லை - பாஜக ஆளக்கூடிய மாநிலங்களில் தான் அங்கு சென்று கம்பு சுற்றுங்கள் -தமிழ்நாட்டில் இல்லை. அங்கு சென்று சுற்றுங்கள்.

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் இழிவான அரசியல்!**

தொடர்ந்து தமிழுக்கு எதிராக - தமிழ்நாட்டுக்கு எதிராக - தமிழர்களுடைய உணர்வுகளுக்கு எதிராக - பேசிவிட்டு வருகின்ற ஆளுநரை வைத்து, தன்னுடைய இழிவான அரசியலை ஒன்றிய பாஜக அரசு செய்கின்றது. என்னைப் பொறுத்தவரையில், அவர் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருக்கவேண்டும். அவர் இருப்பதால்தான் நமக்கு நல்லது என்று நான் ஆரம்பத்தில் இருந்தே நானும் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

ஏனென்றால், நமக்குள் இருக்கின்ற மொழி உணர்வை, இன உணர்வை, திராவிட இயக்கக் கொள்கை உணர்வை பட்டுப் போக விடாமல் - கொள்கை நெருப்பு அணையாமல் பார்த்துக் கொள்கின்ற வேலையை ஆளுநர் ரவி சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்! அவர் பேசட்டும். நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. என்னுடைய நோக்கம் எல்லாம் மக்களாகிய உங்களைப் பற்றிதான். வாக்களித்த உங்களுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஒரே சிந்தனை.

இந்த இரண்டு வாரங்களுக்குள் மூன்று முக்கியமான திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறேன்.

- உங்களுடன் ஸ்டாலின்
- நலம் காக்கும் ஸ்டாலின்
- தாயுமானவர் திட்டம்

இந்தத் திட்டங்களைப் பற்றி நான் அதிகம் விவரிக்கவே தேவையில்லை. ஏனென்றால், பயன்பெற்று வரக்கூடிய நீங்களே அந்தத் திட்டங்களுக்கு தூதராக மாறிவிட்டீர்கள்.

- அரசுத்துறை சேவைகளில், பொதுமக்களுடைய அனைத்துக் கோரிக்கைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றி தருவது 'உங்களுடன் ஸ்டாலின்!' இதுவரை 3 ஆயிரத்து 561 முகாம்களில் நம்முடைய அரசு மேல் முழு நம்பிக்கையுடன் 3 இலட்சத்து 41 ஆயிரத்து 395 பேர் தங்களுடைய கோரிக்கை மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள்.
- நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில், 74 முகாம்கள் மூலமாக இதுவரை 92 ஆயிரத்து 841 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.
- தாயுமானவர் திட்டத்தில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களைக் கண்டறிந்து அவர்கள் வீடுகளுக்கே நேரடியாக ரேசன் பொருட்கள் தரப்படுகிறது.

**உணர்ச்சிப் பெருக்கோடு முதியோர்கள் தரும் பேட்டி!**

இப்படி 21 இலட்சம் குடும்பங்களுக்கு அரசே அத்தியாவசிய பொருட்களை கொண்டு சென்று வழங்கப்படுகிறது. வயதானவர்கள், ரேசன் கடைக்கு வரத் தேவையில்லை. வரிசையில் நிற்கத் தேவையில்லை. பொருட்களை வீடுவரை கஷ்டப்பட்டு தூக்கிக் கொண்டு செல்லத் தேவையில்லை. இவை எல்லாவற்றையும் அரசே செய்து தருகிறது. இதன் மூலமாக, அரசுக்கு கூடுதல் செலவாகும் என்றாலும், அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் செலவாக கருதவில்லை. அரசின் கடமையாகதான் நாங்கள் நினைக்கிறோம். வீட்டிற்கே பொருள் வந்து சேர்ந்ததும், அந்த முதியோர்கள் கொடுத்துவிட்டு வருகின்ற பேட்டிகளை எல்லாம் ஊடகங்களின் நான் பார்த்தேன்.

உணர்ச்சி பெருக்கோடு நா தழுதழுக்க அவர்கள் பேட்டி தருகிறார்கள். அந்த பேட்டிகளைப் பார்க்கும் போது, நானும் அதிகம் உணர்ச்சி வசப்படுகிறேன். நெகிழ்ந்து போகிறேன். நான் முதலமைச்சரானதின் நோக்கம் நிறைவேறிக் கொண்டிருப்பதை நினைத்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன். மனநிறைவை அடைகிறேன்.

அடுத்து அமையப் போவதும் உங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி தான்.

திராவிட மாடல் 2.0 ஆட்சியில், இந்தியாவிலேயே அனைத்துத் துறையிலும் வளர்ந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்துவோம்!

உங்கள் எல்லோருடைய கோரிக்கையையும் நிறைவேற்றுகின்ற ஆட்சியாக நிச்சயம் இருக்கும் என்று சொல்லி, நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன் - இந்த ஆட்சி உங்களுக்கான ஆட்சி! மக்களுக்கான ஆட்சி! ஏழை எளியவர்களுக்கான ஆட்சி! பாட்டாளி பெருமக்களுக்கான ஆட்சி! மகளிருக்கான ஆட்சி! இளைஞர்களுக்கான ஆட்சி! ஒட்டுமொத்த உங்களுக்கான ஆட்சி! ஆட்சி! என்று சொல்லி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## வேங்கையின் மைந்தனாக மட்டுமல்ல; வேளாண்மையின் மைந்தனாகவும் திகழ்கிறார்!



**இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், அவரை அனைவரும் வேங்கையின் மைந்தன் என்று அழைப்பார்கள்; வேங்கையின் மைந்தனாக மட்டுமல்ல, வேளாண்மையின் மைந்தனாவும் தமிழ்நாட்டின் மண்ணும், மக்களும் செழிக்க நாளும் உழைத்து, அரசுத் துறையில் சாதனை மேல் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்! அவருக்கும், அவருக்குத் துணை நிற்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சியர் சதீஷ் அவர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துகளை உங்கள் அனைவரின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

---

### தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர்

# திருவாரூர் அர.திருவிடம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஆக. 18-

தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளர் திருவாரூர் அர.திருவிடம் அவர்கள், நேற்று முன்தினம் (16.8.2025 - சனிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 81.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவிடம் அவர்களின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளராக இருந்து வந்த திருவாரூர் அர.திருவிடம் அவர்கள் மறைவுற்றார்.

1972 ஆம் ஆண்டு 'திருவிடம்' என்ற இதழினைத் தொடங்கி திராவிட இயக்கத்தின் கொள்கைகள், சுயமரியாதைச் சிந்தனைகள் பற்றியும், தந்தை பெரியாரின் கருத்துக்களை முதன்மைப்படுத்தியும் மரபுப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாக வெளியிட்டுவந்த சிறப்புக்குரியவர், திருவிடம் அவர்கள்.

இவர் இயற்றிய "திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை" என 1400 பக்கங்கள் கொண்ட நூலினை கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட அதன் முதல் பிரதியை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருது பெற்றவர் இவர்.

"இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்", "திமுக பெற்ற வெற்றிகளும் வீரத்த மும்புகளும்" என்பன உள்ளிட்ட பல்வேறு நூல்களையும் எழுதியவர் இவர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

கழகத்தின் மீது அவர் கொண்ட பற்று, தமிழ் இலக்கிய ஆளுமை, எழுத்துத் திறன் கண்டு, அவருக்கு "கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர்" பொறுப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டது முதல், இதுவரை, தமது 81வது வயதிலும் தீவிர கழகப் பணியாற்றி வந்தார். திருவிடம் அவர்கள். அவரது மறைவு, கழகத்திற்கு இழப்பு எனின் அது மிகையல்ல.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (17.8.2025 - ஞாயிற்றுக்கிழமை) திருவாரூர், EB காலனியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி, மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 06.08.2025 அன்று மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிக்கு மின்னணு குடும்ப அட்டையினை வழங்கினார். உடன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.